நாள்: 12.03.2021

STC 1799 /2017

அ.சா.1

பெயர்:சிவகுமார்

சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

எதிரியை எனக்கு 20 வருடமாக தெரியும். எதிரி கோவில் குருக்களாக வேலை பார்க்கிறார். அவர் துணிக்கடையும் வைத்திருந்தார். எதிரியின் வருமானம் என்ன என்று எனக்கு தெரியாது. எனக்கு தமிழ் எனக்கு எழுத்துக்கூட்டி படிக்கத் தெரியும். எதிரி காலையில் பணம் கேட்டார். நான் மதியம் பணம் கொடுத்தேன். எதிரிக்கு நான் ரூ.7,00,000/- பணம் கொடுத்தேன். 03.06.2016 ம் தேதி நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். நான் வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். சமையல் வேலையைத் தவிர எனக்கு வேறு எந்த வேலையும் இல்லை. நான் வருமான வரி செலுத்துவதில்லை. எதிரிக்கு நான் ரூ.7,00,000/- பணம் கொடுத்தேன் அனைத்தும் 500 ரூபாய் நோட்டுகள்தான். எதிரிக்கு நான் ரூ.7,00,000/-த்தை வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். எதிரி எனக்கு ஒரு மாதம்கூட வட்டி கொடுக்கவில்லை. ரூ.7,00,000/-க்கு ரூ.100/-க்கு ரூ.2/- வட்டி பேசப்பட்டது. நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதிக்கும் எதிரி எனக்கு செக் கொடுத்த தேதிக்கும் 7, 8 மாதங்கள் இடைவெளியிருக்கும். எதிரி வட்டி பின்னால் தருவதாக சொல்லி வாங்கிய தொகைக்கு மட்டும் காசோலை கொடுத்தார். எதிரி வட்டி பின்னால் தவருவதாக சொன்ன விபரத்தை நான் என் புகாரில் சொல்லவில்லை. நான் எதிரிக்கு பணம் ரூ.7,00,000/- கொடுப்பதற்கு முன்பாக கடனாக நான் பணம் கொடுத்ததில்லை .ஆனால் எதிரி எனக்கு ஏதும் சமையல் ஆர்டர் கொடுப்பார் அது சம்பந்தமான வரவு செலவுதான் இருந்தது. எதிரியிடம் புரோ நோட்டு, காசோலையை தவிர வேறு எந்த ஆவணமும் நான் வாங்கவில்லை. புதசாஆ 1 காசோலையில் உள்ள கையெழுத்தும் அதில் எழுதப்பட்டுள்ள வாசகங்களும் மை வேறு வேறு மை என்றால் அது எனக்கு தெரியாது. பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்துக்கும் அதில் எழுதப்பட்டுள்ள வாசகங்களுக்கும் மை வித்தியாசம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

பிராமிசரி நோட்டும் காசோலையும் ஒரே நாளில் எழுதி வாங்கவில்லை. பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கும்போது எதிரியையும் சேர்த்து 3 பேர் வந்தார்கள். எதிரியுடன் நந்தகுமார், சரவணகுமார் ஆகியோர் வந்தார்கள். காசோலை எங்கள் வீட்டுக்கு வந்து எதிரி கொடுத்தார். காசோலை கொடுக்கும்போது அவருடன் வேறு யாரும் வரவில்லை. நான் சொன்ன நபர்கள்தான் பிராமிசரி நோட்டில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். எதிரிக்கு நான் ரூ.7,00,000/- கொடுக்கவில்லை என்றாலும், எதிரி எனக்கு காசோலையோ பிராமிசரி நோட்டோ எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை:

நான் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் ஜெராக்ஸ் பத்திரம் வைத்திருப்பதாக சொல்லியுள்ளேன். அது என்னுடைய சொத்து பத்திரத்தின் ஜெராக்ஸ் ஆகும். நான் காசோலை மற்றும் பிராமிசரி நோட்டு தவிர வேறு எந்த ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

(ஒம்.B.தங்கமணிகணேஷ்)
நீதித்துறை நடுவர் எண்.1,
பொள்ளாச்சி.